எல்லா வினாக்களுக்கும் விடையளித்து ஒப்படையொன்றை தயாரிக்குக.

பகுதி 1

சுருக்கமான விடை எழுதுக.

1. அப்பியாசகானம் , சபா கானம் இரண்டிற்கும் பொதுவான உருப்படி என்ன?
2. உரையாடல் , பாடல் , நகைச்சுவை உரையாடல் மூன்றும் கலந்த நிகழ்ச்சி எது?
3. கண்டஜாதி அடதாளத்திற்குரிய அங்க அடையாளங்களை குறிப்பிடுக.
4. "சிவபெருமானே...." என்ற கீதம் இயற்றப்பட்ட இராகத்தின் தாய் இராகம் என்ன?
5. பநிஸ்நி / ப˙ரி /˙ரீ // என்ற ஸ்வரப்பகுதிக்கான ஸாகித்ய பகுதியை எழுதுக.
6. "உற்றுமை சேர்வது .." என்ற தேவாரம் பாடப்பட்ட தலம் எது?
7. திருவிசைப்பா பாடப்படும் இராகம் எது?
8. உபாங்க இராகத்திற்கு ஒரு உதாரணம் தருக.
9. தைவதாந்திய இராகத்தினை தருக.
10. "கலைமகளே ..." என்ற கீதத்தின் இராகம் என்ன?
11. சங்கீத அளவு கோல் எனச்சிறப்பித்து கூறப்படும் வாத்தியம் எது?
12. 'சங்கீர்ண' என்ற தாளத்தினை கண்டுபிடித்தவர் யார்?
13. அகத்திணை மரபினை சார்ந்த திருப்பதிகங்கள் இரண்டு குறிப்பிடுக.
14. "கண்டபின் கண் குளிர்ந்தேன் .." என்ற முத்துத்தாண்டவரின் கீர்த்தனையின் இராகம் , தாளம் இரண்டையும் குறிப்பிடுக.
15. முத்துத்தாண்டவர் இறுதியாகப்பாடிய கீர்த்தனை யாது?

(15 X 2 = 30 புள்ளிகள்)

பகுதி 11

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

1.1) ஜன்னிய இராகப்பிரிவுகளைத்தருக

1.2) உபாங்க இராகம என்றால் என்ன? என்பதை உதாரணத்துடன் விளக்குக.

1.3) வர்ஜ இராகத்தினை உதாரணத்துடன் விளக்குக.

1.4) நிஷாதாந்திய இராகம் என்பதனை உதாரணத்துடன் விளக்குக.

(15 புள்ளிகள்)

2. தோடி இராகத்தின் இலட்சணத்தினை பின்வரும் அடிப்படையில் எழுதுக.

2.1) மேள எண்

2.2) ஆரோஹண அவரோஹணம்

2.3) ஸ்வர தானங்கள்

2.4) இராகச்சாயாஸ்வரங்கள்

2.5) இதர அம்சங்கள் ஆறு

2.6) சஞ்சாரம்

2.7) உருப்படிகள் இரண்டு (15 புள்ளிகள்)

3 3.1) வீணை வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக்குறிக்க.

3.2) வீணை வாத்தியத்தின் சிறப்புகள் இரண்டினைத் தருக.

3.3) வீணை வாத்தியத்தின் அமைப்பினை விளக்குக.

3.4) இவ்வாத்தியத்தின் வாசிப்புத்தந்திகளின் பெயர்களை கிரமமாக எழுதுக.

3.5) இவ்வாத்தியத்தை வாசித்து பிரபல்யம் அடைந்த கலைஞர்கள் இருவரைத்தருக.

4 இந்தியாவில் 7ம் 8ம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி தொடர்பான 15 விடயங்களை எழுதுக. (15 புள்ளிகள்)

5. முத்துத்தாண்டவரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைப்பணிகளையும் பின்வரும் விடயங்களின் அடிப்படையில் எழுதுக.

5.1) வாழ்க்கைக்காலம்

5.2) பிறந்த இடம்

5.3) இளமைக்காலம்

5.4) வாழ்க்கைச் சம்பவங்கள்

5.5) இவர் இயற்றிய உருப்படிகள் நான்கு

5.6) இவரது உருப்படிகளின் சிறப்புக்கள் இரண்டு (15 புள்ளிகள்)

6 6.1) வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குரிய கதை அல்லது கருப்பொருள் இரண்டை எழுதுக.

6.2) வில்லில் ஓசையினை எழுப்ப எதனைப் பயன்படுத்த வேண்டும்?

6.3) குழுவிற்குரிய செயற்பாட்டினை சுருக்கமாக எழுதுக.

6.4) வில்லுப்பாட்டு நிகழ்வுக்க பயன்படுத்தப்படும் வாத்தியங்கள் மூன்றை எழுதுக.

(10 புள்ளிகள்)

www.lkedu.lk